**கேகாலை பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கேகாலை பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டு கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் கேகாலை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மொரன்தொட பொது சந்தை கட்டிடத் தொகுதியின் முதலாம் மாடி நிர்மாண வேலையின் நிர்வாக மற்றும் மதியுரை செலவுகள் ரூபா 337,972 கூடுதலாக கணக்கீடு செய்துள்ளமையால் ஆண்டின் மூலதன செலவு மற்றும் கடன்கொடுனர் அத்தொகையால் கூடுதலாக காட்டப்பட்டுள்ளன. | உள்ளவாரான செலவு ரூபா 990,556 ஆனதுடன், கூடுதலாக மதிப்பிடப்பட்ட தொகை 2021 திரண்ட நிதியத்திற்கு பதிவழிக்கப்பட்டதாகவும் எதிர்காலத்தில் கவனத்துடன் செயற்படுமாறு விடய பொறுப்பு உத்தியோகத்தரை அறிவூட்டியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 18,446 மீளாய்வாண்டு செலவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதால் ஆண்டின் மிகை அத்தொகையால் குறைத்து காட்டப்பட்டுள்ளது. | 06 வவுசர்களின் மேலதிக நேர கொடுப்பனவுகளிற்கு அவர்களால் ஒதுக்கீடு ஏற்பாடு செய்யக் கோராததால் கடன்கொடுனர் ஒதுக்கீட்டிலிருந்து செம்மையாக நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் எதிர்காலத்தில் அவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டிற்குரிய செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 21,293,998 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 19,121,179 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி மற்றும் குத்தகை | | |
| (i) | நிலுவை வீதவரி மற்றும் குத்தகை ரூபா 1,152,759 ஆனதுடன் இம் மீதியை அறவிட நடவைடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலவும் கொரோனா தொற்று நிலமையின் மீது வீதவரி சேகரிக்க களத்திற்கு செல்ல முடியாத போனதுடன், எதிர்காலத்தில் நடமாடும் சேவை நடாத்தி நிலுவை அளவை குறைத்துக் கொள்ளவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்ட பிரகாரம் செயற்பட்டு நிலுவை வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 220,741 ஆனது. | காணப்படும் நிலுவையில் ஒரு பகுதி நகர பிரிவுகளிற்கு காணி பிரிந்து சென்றதில் குத்தகை அறவிட முடியாத நிலையிலான ஆதனமாவதுடன் அவ் ஆதனங்களை இனங்காண ஒப்பாய்வு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இச் செயற்பாட்டை தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக அறிதவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை ஏக்கர் வரி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் | | |
| | மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2020 திசெம்பர் 31 திகதி கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பண மீதி ரூபா 14,360,502 மற்றும் முத்திரைக் கட்டண மீதி ரூபா 28,130,490 ஆனது. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் பிரதான அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள போதும் இது வரை சபைக்கு வழங்கப்படாததால் மீண்டும் ஒரு முறை கோரிகையை முன்வைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் நிலுவை முத்திரைக் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுப்பதாகவும், அறிவிக்கப்பட்டுள்ளது. | சபைக்கு அறிவிட வேண்டிய வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக

சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| றங்வல கட்டிட நிர்மாணத்திற்காக 2019 ஆண்டு பொது நிதியிலிருந்து ரூபா 983,000 கடன்கொடுனராக ஏற்பாடு செய்யப்பட்ட போதும் கணக்காய்வு திகதி வரையில் நிர்மாண பணிகள் ஆரம்பிக்கப்பட அல்லது அதற்காக எவ்வித செலவும் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | தற்போது கடன்கொடுனரினுள் ஒதுக்கிய தொகையிலிருந்து கட்டித்தை உடைத்து ஒதுக்க மற்றும் திட்டத்தை தயாரிப்பதற்கான ஆரம்ப செலவுககளை மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிர்மாணப் பணிகளை கூடிய விரைவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| உள்ளூராட்சி அமைச்சிற்கு சொந்தமான ரூபா 35,474,734 பெறுமதியுடைய 05 வானங்கள், சபுரகமுவ மாகாண சபைக்கு சொந்தமான ரூபா 3,865,000 பெறுமதியுடைய 02 டெக்கடர்கள் மற்றும் ரூபா 416,000 பெறுமதியான 02 டேலர்கள் சபை நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்ட போதும் 2017 திசெம்பர் 21 இன் 20/2017 இலக்க சொத்துக்கள் முகாமை சுற்றறிக்கையின் 2.1 பந்தி பிரகாரம் சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அனைத்து வாகனங்களையும் சபைக்கு சுவீகரிக்க தேவையான சகல ஆகவணங்களும் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் எதிர்காலத்தில் சுவீகரிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் சொத்துக்களை சுவீகரிக்க நடவடிக்கை வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2020 ஆண்டு ஒன்றுசேர்ந்த உக்கலடையாத கழிவுப் பொருட்கள் 05 டொன்கள் அளவானது. அதற்காக மேற்கொண்டுள்ள செலவு ரூபா 164,000 அளவானதுடன் ஈடுபடுத்திய ஊழியர்களின் எண்ணிக்கை 03 ஆனது. கழிவுப் பொருள் முகாமை நடவடிக்கைகளுக்காக காணியொன்று இல்லாததால் உக்கலடையாத கழவுகள் விற்கப்படுவதுடன் உக்கலடையும் பொருட்கள் மொரன்தொட சந்தை வளவிற்கு வெளியிடப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் ஒதுக்கப்படும் கழிவுகளை பயன்படுத்தி உயிர்வாயு அலகொன்றை சந்தை வளவில் நிருவி மின்சாரத்தை வழங்கும் கருத்திட்டமொன்றை ஆரம்பிக்க திட்டம் தீட்டியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கழிவு முகாமை நடவடிக்கைகளை முறையாக செய்ய வேண்டும். |